தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253
நமது தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 220 | 4 Pages | 8.3.2025 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 02 | இதழ்: 220 | 4 பக்கங்கள் | 8.3.2025 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**உயிருடம்பின் நீக்கியா ரென்ப செயிருடம்பின்**
**செல்லாத்தீ வாழ்க்கை யவர்**

**விளக்கம்:**
**நோய் மிகுந்த உடம்புடன் வறுமையான தீய வாழ்க்கை உடையவர், முன்பு கொலை பல செய்து உயிர்களை உடம்புகளில் இருந்து நீக்கினவர் என்று அறிஞர் கூறுவர்.**

## காங்கிரஸ் இன்று ஒரு தேசிய கட்சி அல்ல ஜே.பி.நட்டா விமர்சனம்



சிம்லா, மார்ச். 8

இமாசல பிரதேச மாநிலம் பிலாஸ்பூர் பகுதியில் நடைபெற்ற பா.ஜ.க. பொதுக்கூட்டத்தில் மத்திய சுகாதாரத்துறை மந்திரி ஜே.பி.நட்டா கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது;

"காங்கிரஸ் கட்சி மகாத்மா காந்தி, சர்தார் வல்லபாய் பட்டேல், சுபாஷ் சந்திர போஸ் ஆகியோரின் கொள்கைகளை பின்பற்றுகிறதா? சுதந்திர போராட்டத்தில் உயிர்தியாகம் செய்தவர்களின் நற்பெயரை காப்பாற்ற காங்கிரஸ் கட்சியால் முடியுமா?

கொள்கைரீதியாகஒருதிவால்நிலையைகாங்கிரஸ்கட்சிஅடைந்திருக்கிறது. காங்கிரஸ் கட்சி ஒன்று ஒரு தேசிய கட்சியோ அல்லது கொள்கை ரீதியான கட்சியோ அல்ல. அது சகோதரர்கள், சகோதரிகள் மற்றும் தாய்மார்களின் கட்சியாக மாறிவிட்டது.

இமாசல பிரதேசத்தை தங்கள் இதயத்தில் வைத்திருப்பதாக கூறியவர்கள், விடுமுறையை கொண்டாடுவதற்காக மட்டுமே இங்கு வந்தார்கள். பேரிடர் காலத்தில் இமாசல பிரதேச மக்களின் கண்ணீரை துடைக்க அவர்கள் வரவில்லை. நானும், அனுராக் தாக்கூரும், ஜெய்ராம் தாக்கூரும் 3 முறை இங்கு வந்து சில ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான நிவாரண உதவிகளை வழங்கினோம்.

உலகம் முழுவதும் உள்ள மக்கள் இந்தியாவின் பொருளாதாரத்தை புகழ்ந்து பேசுகின்றனர். ஆனால் காங்கிரஸ் கட்சி வேலைவாய்ப்பின்மை குறித்து மட்டுமே பேசி வருகிறது. அது உண்மைதான், காங்கிரஸ் கட்சி வேலையை இழந்துவிட்டது.

இன்றுஇந்தியாஉலகின்5வதுமிகப்பெரியபொருளாதாரமாகஉயர்ந்துள்ளது. மேலும் 3வது இடத்தை நோக்கி நாம் முன்னேறி வருகிறோம். இதை காங்கிரஸ் கட்சியினரிடம் யார் எடுத்துரைப்பார்கள்."

இவ்வாறு ஜே.பி.நட்டா தெரிவித்தார்.

## தங்க கட்டியை கடத்தி வர தொடையை பயன்படுத்திய நடிகை விசாரணையில் பரபரப்பு தகவல்

பெங்களூரு, மார்ச். 8

கர்நாடக மாநிலம் சிக்கமகளூருவை சேர்ந்தவர் நடிகை ரன்யா ராவ் (வயது 32). தமிழில் நடிகர் விக்ரம் பிரபுவுடன் 'வாகா' என்ற படத்தில் நடித்திருந்தார். தற்போது பெங்களூரு லாவல்லி ரோட்டில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் நடிகை ரன்யா ராவ் வசித்து வருகிறார்.

கர்நாடக மாநில போலீஸ் வீட்டுவசதித்துறை டி.ஜி.பி.யான ராமசந்திரா ராவின் வளர்ப்பு மகளான ரன்யா ராவ் கடந்த 3ந் தேதி துபாயில் இருந்து, 14 கிலோ 800 கிராம் தங்க கட்டிகளை கடத்தி வந்தபோது, பெங்களூரு கெம்பேகவுடா விமான நிலையத்தில் வருவாய் நுண்ணறிவு பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். பின்னர் அவர் சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்தநிலையில்நடிகைரன்யாராவ்பற்றிபரபரப்புதகவல்கள்விசாரணையில் தெரியவந்துள்ளது.

அதாவது ரன்யா ராவ் துபாயில் தான் தொழில் செய்து வருவதாகவும், அதனால்தான் அடிக்கடி அங்கு சென்று வந்ததாகவும் தன்னை பிடித்த வருவாய் நுண்ணறிவு பிரிவு அதிகாரிகளிடம் கூறியுள்ளார்.

அதுபற்றி அதிகாரிகள் விசாரித்தபோது, அவர் எந்த விதமான தொழிலையும் துபாயில் செய்யவில்லை என்பதும், தங்கம் கடத்தலில் மட்டுமே ஈடுபட்டு வந்ததும் தெரியவந்துள்ளது. ரன்யா ராவின் தந்தை டி.ஜி.பி.யாக இருந்து வருவதால் துபாயில் இருந்து அவர் பெங்களூருவுக்கு வரும் போதெல்லாம், விமான நிலைய போலீஸ் நிலையத்தில் பணியாற்றும் போலீசாரே, அவரை வெளியே அழைத்து வந்துள்ளனர். இதை சாதகமாக பயன்படுத்தி கொண்ட ரன்யா ராவ், தன்னிடம் அதிகாரிகள் சோதனை நடத்துவது இல்லை என்பதால், துபாயில் இருந்து பெரிய அளவில் தங்கத்தை அவ்வப்போது கடத்தி வந்துள்ளார்.

அவர் கடந்த ஒரு ஆண்டுக்கும் மேலாக தங்க கடத்தலில் ஈடுபட்டு வந்ததும், கடந்த ஆண்டில் மட்டும் அவர் 40 முறையும், இந்த ஆண்டு இதுவரை 8 முறையும் அவர் துபாய்க்கு சென்று வந்தது தெரியவந்துள்ளது.

இவ்வாறு அவர் சென்று வந்தபோது ஒரே ஆடையை மட்டுமே அணிந்து சென்று வந்துள்ளார்.அதாவது துபாயிலிருந்து பெங்களூருவுக்கு தங்கக்கட்டிகளை கடத்தி வந்து கைதான நடிகை ரன்யா, சோதனையிலிருந்து தப்பிக்க தொடையில் தங்கக்கட்டிகளை ஒட்டிவைத்திருந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.நடிகைரன்யாராவ்தங்கம்கடத்தியவழக்கின்பின்னணியில் முக்கியபுள்ளிகளுக்குதொடர்பிருக்கலாம்எனஅதிகாரிகள்சந்தேகிக்கிறார்கள்.

ரன்யாவிடமிருந்து ரூ.2 கோடி மதிப்பிலான நகைகள்,ரூ.2.5 கோடி ரொக்கம், ரூ.12.56 கோடி மதிப்பிலான தங்கக்கட்டிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

## மும்மொழி கொள்கை விவகாரம்: சுப்ரீம் கோர்ட்டில் பொதுநல மனு தாக்கல்

புதுடெல்லி, மார்ச். 8

மத்திய அரசு கொண்டு வந்துள்ள தேசிய கல்வி கொள்கை 2020ன் படி மும்மொழி பாடத்திட்ட கொள்கையை அனைத்து மாநில அரசுகளும் ஏற்று அமல்படுத்தி வருகிறது. தமிழ்நாடு, கேரளா, மேற்குவங்காளம் ஆகிய மாநிலங்கள் மும்மொழி கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

இந்த நிலையில், இது தொடர்பாக பாஜக வழக்கறிஞர் ஜி.எஸ்.மணி, சுப்ரீம் கோர்ட்டில் பொதுநல மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார். அதில், தேசிய கல்வி கொள்கை என்பது அனைத்து தரப்பு மாணவர்களின் பள்ளி கல்வி தரத்தை மேம்படுத்தவும், அனைத்து இந்திய மொழிகளையும் ஏழை எளிய பட்டியல், பழங்குடியின, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினை சார்ந்த பள்ளி குழந்தைகள் இலவசமாக கற்க வேண்டும் என்ற நோக்கத்தோடும் ஒன்றிய அரசால் கொண்டு வரப்பட்ட கல்விக் கொள்கை திட்டமாகும்.

இதனை அரசியல் காரணங்களுக்காக தமிழ்நாடு, கேரளா, மேற்குவங்காளம் உள்ளிட்ட மாநில அரசுகள் ஏற்க மறுக்கின்றன. மேலும் மத்திய அரசு கொண்டுவரும் சட்ட திட்டம் அனைத்து மாநில அரசுகளுக்கும் பொருந்துவது என்பதுமட்டுமில்லாமல்,அத்தகையகொள்கையைஅமல்படுத்தவேண்டியது மாநில அரசின் கடமையாகும். இலவச கல்வி என்பது அரசியலமைப்பு கொடுத்துள்ள அடிப்படை உரிமை. இந்த திட்டத்தை ஏற்க மறுப்பதினால் மாநில அரசு, சம்பந்தப்பட்ட பள்ளி குழந்தைகளின் அடிப்படை உரிமையான இலவச கல்வியை மறுக்கும் செயல் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சோழிங்கநல்லூரில் உயர்தர மின் மேலாண்மை ஆராய்ச்சி மையம் முதல்வர் அடிக்கல் நாட்டினார்

சென்னை, மார்ச். 8

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று தலைமைச் செயலகத்தில் அமெரிக்காவைச் சேர்ந்த ஈட்டன் குழுமத்தின் துணை நிறுவனமான, ஈட்டன் எலக்ட்ரிக் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம் 200 கோடி ரூபாய் முதலீட்டில் 500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், சென்னை சோழிங்கநல்லூரில் உயர்தர மின் மேலாண்மை கருவிகள் உற்பத்தி, ஆராய்ச்சிமற்றும்மேம்பாட்டிற்கான மையம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அரசுமுறைப் பயணமாக, 2024ம் ஆண்டு செப்டம்பர் மாதம் அமெரிக்கா சென்றபோது, இந்த நிறுவனத்தால், சென்னையில் உற்பத்தி, ஆராய்ச்சிமற்றும்மேம்பாடு, உலகளாவிய பயன்பாடு மற்றும் பொறியியல் மையம் அமைத்திட புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.



அதன் பிறகு ஆறே மாதங்களில், இத்திட்டம் அமைப்பதற்கு முதலமைச்சரால் இன்றைய தினம் அடிக்கல் நாட்டப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. 1 லட்சம் சதுர அடி பரப்பளவுடன், மேம்பட்ட உற்பத்தித் தளங்கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான வசதிகளுடன் இம்மையம் அமைக்கப்பட உள்ளது.

# ஆட்சேபம் இல்லாத புறம்போக்கு நிலங்களில் வசிப்போருக்கு பட்டா: வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட்ட தமிழ்நாடு அரசு

சென்னை,மார்ச். 8


ஆட்சேபம் இல்லாத புறம்போக்கு நிலங்களில் வசிப்போருக்கு பட்டா வழங்குவது தொடர்பாக தமிழ்நாடு அரசு விரிவான வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

நீர்நிலை, மேய்ச்சல் நிலம், கோயில் நிலம் மற்றும் உரிமையாளர் அடையாளம் காணப்படாத நிலங்களில் வசிப்போருக்கு பட்டா வழங்கப்படாது . சென்னை பெருநகரப் பகுதியில் 10 ஆண்டுகளுக்கு மேல் வசிப்போருக்கு பட்டா வழங்கப்படும் . மற்ற இடங்களில் 5 ஆண்டுகளுக்கு மேல் வசிப்போருக்கு பட்டா வழங்கப்படும் . 3 லட்சத்திற்கு குறைவான ஆண்டு வருமானம் உள்ள குடும்பங்களுக்கு இலவசமாக பட்டா வழங்கப்படும் உள்ளிட்ட பல்வேறு வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன. மாநிலம் முழுவதும் சுமார் 86,000 பேருக்கு அடுத்த 6 மாதங்களுக்குள் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது .



# மனித நேயம், சகோதரத்துவத்தை பின்பற்றுவோம்: இப்தார் நோன்பு நிகழ்ச்சியில் விஜய் பேச்சு



சென்னை, மார்ச். 8

ரமலான் மாதத்தையொட்டி, தவெக சார்பில் சென்னை ராயப்பேட்டையில் உள்ள ஒய்.எம்.சி.ஏ., அரங்கத்தில் இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது. இந்த நிகழ்ச்சியில் பங்கேற்க மாவட்டத்திற்கு 5 இஸ்லாமிய நிர்வாகிகளுக்குதவெகஅழைப்பு விடுக்கப்பட்டு உள்ளது.

நிகழ்ச்சியில் பங்கேற்க விஜய் மாலை 5 மணியளவில் வருகை தந்தார். விஜய்யை காண அதிக அளவில் பொதுமக்கள் ஒய்.எம்.சி.ஏ மைதானத்தில் குவிந்துள்ளனர். 6 மணியளவில் நிகழ்ச்சி நடைபெறும் அரங்கிற்கு விஜய் வருகை தர உள்ளார். இந்த நிகழ்ச்சியில் நிர்வாகிகள், தொண்டர்கள் உள்பட சுமார் 3000 பேர் பங்கேற்றுள்ளனர்.

இஸ்லாமியர்களுடன் இணைந்து நோன்பு திறந்த தொழுகை மேற்கொண்டார். நோன்பு கஞ்சியையும் அருந்தினார். பின்னர் நிகழ்ச்சியில் பேசிய விஜய், மனிதநேயம் சகோதரத்துவத்தை பின்பற்றுவொம். மாமனிதர் நபிகள் நாயகத்தின் வாழ்க்கையை பின்பற்றுவோம்" என்றார். நிகழ்ச்சி முடிந்து சென்றபோது விஜய், திறந்த வேனில் அங்கிருந்தவர்களை நோக்கி கை அசத்தபடி சென்றார்.

நோன்பு திறக்கும் நிகழ்ச்சி முடிந்த பிறகு தவெக சார்பில் மட்டன் விருந்துக்கும் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. ஒய்.எம்.சி.ஏவில் நடைபெறும் இந்த நிகழ்ச்சி காரணமாக ராயப்பேட்டை பகுதியில் போக்குவரத்து நெரிசல் அதிகரித்துள்ளது.

# அரசு பேருந்து லாரி நேருக்கு நேர் மோதி விபத்து: 7 பேர் பலி

திருவள்ளூர், மார்ச். 8

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி அருகே அரசு பேருந்தும் , லாரியும் நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது . இந்த விபத்தில் 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

கேஜி கண்டிகை பகுதியில் நடந்த இந்த விபத்தில் 20 பேர் படுகாயமடைந்துள்ளனர். படுகாயமடைந்தவர்கள் அருகே உள்ள அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் .

திருத்தணி சோளிங்கர் மாநில நெடுஞ்சாலை விரிவாக்கம் நடந்து வரும் நிலையில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது இந்த விபத்து தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொன்டு வருகின்றனர் .



# அரிவாளால் வெட்டிவிட்டு தப்பிய வாலிபரை சுட்டுப்பிடித்த போலீசார்... தூத்துக்குடியில் பரபரப்பு

தூத்துக்குடி, மார்ச். 8

தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் அருகே உள்ள மேலநம்பிபுரத்தை சேர்ந்தவர் பூவன். இவரது மனைவி சீதாலட்சுமி (வயது 70). இவர்களது மகள் ராமஜெயந்தி (45). பூவன் இறந்துவிட்டதால், தாய்மகள் மட்டும் வீட்டில் தனியாக வசித்து வந்தனர்.

இந்த நிலையில், கடந்த 3ந் தேதி வீட்டிற்குள் புகுந்த மர்மநபர்கள் சீதாலட்சுமி, ராமஜெயந்தி ஆகிய 2 பேரையும் கழுத்தை நெரித்துக் கொலை செய்துவிட்டு அவர்கள் அணிந்திருந்த சுமார் 13 பவுன் தங்க நகைகளை கொள்ளையடித்து சென்றனர். இந்த இரட்டை கொலை குறித்து எட்டயபுரம் போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். 9 தனிப்படை அமைத்து மர்மநபர்கள் குறித்து போலீசார் விசாரணை நடத்தினர். மேலும் சந்தேகத்தின் பேரில் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த 10க்கும் மேற்பட்டவர்களை பிடித்து விசாரணை மேற்கொண்டனர்.

அப்போது, இந்த சம்பவத்தில் ஈடுபட்டது எட்டயபுரம் அருகே உள்ள தாப்பாத்தி கிராமத்தை சேர்ந்த வேல்முருகன், மேலநம்பிபுரத்தை சேர்ந்த மகேஷ் கண்ணன், முனீஸ்வரன் என்பது தெரியவந்தது. இவர்கள் கஞ்சா போதையில் இந்த கொலை, கொள்ளையை அரங்கேற்றியதும் கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து 3 பேரையும் பிடிக்க போலீசார் நடவடிக்கை மேற்கொண்டனர்.

இதையடுத்து முத்துலாபுரம் காட்டுப்பகுதியில் வேல்முருகன், மகேஷ் கண்ணன் ஆகியோர் பதுங்கி இருப்பதாக போலீசுக்கு தகவல் கிடைத்தது. அதன் பேரில் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற போலீசார் 2 பேரையும் சுற்றி வளைத்து கைது செய்தனர். அப்போது தப்பி ஓடிய போது 2 பேரும் தவறி விழுந்ததில் காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. அவர்கள் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.



தொடர்ந்து இந்த சம்பவத்தில் முக்கிய குற்றவாளியாக கருதப்படும் முனீஸ்வரன் அயன்வடமலாபுரம் காட்டுப்பகுதியில் பதுங்கி இருப்பதாக போலீசுக்கு தகவல் கிடைத்தது. 9 தனிப்படையைச் சேர்ந்த சுமார் 100க்கும் மேற்பட்ட போலீசார் காட்டுப் பகுதியில் தீவிரமாக தேடினார்கள். இருப்பினும் முனீஸ்வரன் சிக்கவில்லை.இந்நிலையில், முனீஸ்வரன், அயன்வடமலாபுரத்தில் உள்ள தனது உறவினர் வீட்டிற்கு வந்ததாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது. போலீசார் அங்கு சென்று கதவை தட்டினார்கள்.

ரோலீசார் வந்ததை அறிந்த முனீஸ்வரன் வீட்டின் பின்வாசல் வழியாக தப்பி ஓடினார். இதை அறிந்த போலீசார் அவரை சுற்றிவளைத்து பிடித்து கைது செய்தனர். பின்னர் அவரை போலீஸ் நிலையத்திற்கு அழைத்து சென்று விசாரணை நடத்தினர். அப்போது, கொள்ளையடிக்கப்பட்ட நகைகளை எட்டயபுரம்கீழஈரால் பைபாஸ் சாலையில் உள்ள காட்டுப்பகுதியில் பதுக்கி வைத்து இருப்பதாக முனீஸ்வரன் தெரிவித்தார். அந்த நகைகளை மீட்பதற்காக முனீஸ்வரனை, குளத்தூர் போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் முத்துராஜா மற்றும் போலீசார் அழைத்து சென்றனர்.

காட்டுப்பகுதியில் நகைகளை எடுக்கும்போது, அங்கு மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து முனீஸ்வரன், சப்இன்ஸ்பெக்டர் முத்துராஜா மற்றும் போலீஸ்காரர் ஜாய்சன் நவதாஸ் ஆகியோரை வெட்டிவிட்டு தப்பி ஓடினார். இதில் முத்துராஜாவுக்கு இடது கையிலும், போலீஸ்காரர் ஜாய்சன் நவதாசுக்கு வலது கையிலும் வெட்டு விழுந்தது. உடனடியாக போலீசார் எச்சரிக்கை செய்தனர். எனினும் முனீஸ்வரன் தப்பி ஓடினார். உடனே சப்இன்ஸ்பெக்டர் முத்துராஜா துப்பாக்கியால் முனீஸ்வரனின் வலது காலில் சுட்டார். இதில் குண்டு பாய்ந்ததில் காயமடைந்த அவர் சுருண்டு விழுந்தார்.

காயம்அடைந்தமுனீஸ்வரனையும், வெட்டுக்காயம் அடைந்த 2 போலீசாரையும் மீட்டு சிகிச்சைக்காக எட்டயபுரம் அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு 3 பேருக்கும் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு, மேல் சிகிச்சைக்காக தூத்துக்குடி அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த சம்பவம் தூத்துக்குடி மாவட்டத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# தமிழக மீனவர்கள் 14 பேர் கைது: இலங்கை கடற்படை அட்டூழியம்

சென்னை, மார்ச். 8

தமிழகத்தை சேர்ந்த மீனவர்களை எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி இலங்கை கடற்படையினர் சிறைபிடிக்கும் சம்பவம் தொடர்ந்து நடந்து வருகிறது. மீனவர்கள் கைது செய்யப்படுவதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று கோரிக்கைகள் வலுத்து வரும் நிலையிலும், இலங்கை கடற்படையினர் கைது செய்யும் சம்பவம் மட்டும் தொடர்ந்து நடந்து கொண்டு வருகிறது.

இந்நிலையில், எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கூறி பாம்பன் மீனவர்கள் 14 பேரை கைது இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர். மேலும், மீனவர்களின் விசைப்படகையும் பறிமுதல் செய்துள்ளனர். இலங்கை மன்னார் தெற்கு கடற்பரப்பில் மீன் பிடித்ததாக கூறி கைது செய்துள்ளனர்.

முதற்கட்ட விசாரணைக்கு பின்னர் மன்னார் மீன்வளத்துறை அதிகாரிகளிடம் மீனவர்கள் ஒப்படைக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. மேலும், மீனவர்கள் 14 பேரும் கோர்டில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட உள்ளதாகவும் கூறப்படுகின்றது. இலங்கை கடற்படையால் மீனவர்கள் 14 பேர் கைது செய்யப்பட்ட சம்பவம் சக மீனவர்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# தென்மாவட்ட சட்டம் ஒழுங்கு; டி.ஜி.பி. சங்கர் ஜிவால் தலைமையில் ஆலோசனை



மதுரை, மார்ச். 8

தென்மாவட்ட சட்டம் ஒழுங்கு குறித்து, காவல் துறை உயர் அதிகாரிகளுடன் டி.ஜி.பி. சங்கர் ஜிவால் ஆலோசனை நடத்தினார். மதுரை காவல் ஆணையர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்த ஆலோசனையில் முதற்கட்டமாக மதுரை மற்றும் விருதுநகர் மாவட்ட காவல்துறை அதிகாரிகள்பங்கேற்றனர்.

இந்தகூட்டத்தில்பேசிய சங்கர் ஜிவால், காவல்துறையினர்சிறார்கள், பெண்கள் மீதான வன்கொடுமைகளை தடுக்க வேண்டும், சைபர் கிரைம் குற்றங்கள், போதை வஸ்துகள் விற்பனையை தடுப்பதில் தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்று அறிவுறுத்தினார். மேலும் பொதுமக்கள்காவல்துறைஇடையே நட்புறவை பேணிக்காக்க வேண்டும் எனவும் அறிவுரை வழங்கினார்.

# நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு குடியிருப்புகளில் மின்சார கட்டமைப்பை மேம்படுத்த திட்டம்



சென்னை, மார்ச். 8

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் பராமரிப்பில், சென்னையில் 1 லட்சத்து 17 ஆயிரத்து 16 அடுக்குமாடி குடியிருப்புகள், தமிழகத்தின் மற்ற நகரங்களில், 76 ஆயிரத்து 875 அடுக்குமாடி குடியிருப்புகள் என மொத்தம் 1 லட்சத்து 93 ஆயிரத்து 891 அடுக்குமாடி குடியிருப்புகள் உள்ளன. இதில், பல ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு, சிதிலமடைந்த குடியிருப்புகள் இடிக்கப்பட்டு, மீண்டும் அதே பகுதியில் புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

சென்னை உள்பட பல்வேறு நகரங்களில் உள்ள நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு குடியிருப்புகளில், கழிவு நீர் வடிகால் சேதமடைந்தும், மின்சார வழித்தடங்கள் முறையான பராமரிப்பின்றியும் காணப்படுகின்றன. குடியிருப்புகளில், தாழ்வான சுவர்களில் மீட்டர் பாக்ஸ்கள் செயல்பாட்டில் இருந்து வருகின்றன.

இந்த நிலையில், நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளில், மின்சார கட்டமைப்புகளை வலுப்படுத்த தமிழ்நாடு மின்சார வாரியம் திட்டமிட்டு, அதற்கான உத்தரவை உதவி ஆய்வாளர்களுக்கு வழங்கி உள்ளது. அந்த வகையில், நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளில், மீட்டர் பாக்ஸ்களின் உயரத்தை அதிகரிக்கவும், உயரம் குறைவான மின் கம்பங்களை மாற்றியமைக்கவும் அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்.

தற்போது, தாழ்வான மீட்டர் பாக்ஸ்கள் குறித்து கணக்கெடுக்கப்பட்டு வருகிறது. விரைவில், உயரம் அதிகரிக்கும் பணிகள் தொடங்கும் என மின்வாரிய அதிகாரிகள் தெரிவித்தனர். அதேபோல, சேதமடைந்த, திறந்த நிலையில் உள்ள மின் பெட்டிகளையும் மாற்றியமைக்கவும், சீரமைக்கவும் மின்சார வாரியம் திட்டமிட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும், டிரான்ஸ்பார்மர்களை சுற்றிலும், பொதுமக்கள் குப்பைகளை கொட்டி அசுத்தம் ஏற்படுத்தாத வகையில், மாநகராட்சியுடன் இணைந்து தடுப்புகள் அமைக்கும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக மின்வாரிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

# நிலவுக்கே சென்றாலும் சாதியை தூக்கி செல்வார்கள்: சென்னை ஐகோர்ட்டு காட்டம்



சென்னை, மார்ச். 8

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்கு சிறப்பு அதிகாரியை நியமித்ததை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த சென்னை ஐகோர்ட்டு, சங்கங்களை பதிவு செய்யும் சட்டத்தின் கீழ், சாதிகளை மையப்படுத்தக் கூடிய சங்கங்களை பதிவு செய்யலாமா? எனவும், பள்ளி, கல்லூரிகளின் பெயர்களில் உள்ள சாதி பெயர்கள் நீக்கப்படுமா? என்பது குறித்து விளக்கமளிக்கும்படியும் தமிழக அரசுக்கு உத்தரவிட்டது.

இந்த வழக்கு இன்று நீதிபதி பரத சக்கரவர்த்தி முன்பு மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் இந்த வழக்கில் அரசின் நிலைப்பாட்டை தெரிவிக்க அவகாசம் வழங்க வேண்டும் என கேட்டுக் கொள்ளப்பட்டது.

ஏற்கனவே இரண்டு முறை அவகாசம் வழங்கப்பட்டதை சுட்டிக்காட்டிய நீதிபதி, "அரசு பள்ளிகளில் சேரும்போது, சாதிகள் இல்லையடி பாப்பா, சாதி இரண்டொழிய வேறில்லை என்று கற்றுத் தரும் நிலையில், இன்று நான் நீதிபதியாக இருக்கும்போது படித்த பாடத்திற்கு ஏற்ப நான் நிற்க வேண்டாமா?" என்று கேள்வி எழுப்பினார்.

அதோடு, குறிப்பிட்ட சாதியினர் மட்டுமே உறுப்பினராக இருக்கலாம் என்று விதியை திருத்தும்படி சங்கங்களுக்கு ஐகோர்ட்டு மதுரைக்கிளை உத்தரவிட்டிருப்பதை சுட்டிக்காட்டிய நீதிபதி, அந்த உத்தரவு காகிதத்தில் மட்டுமே இருப்பதாகவும், எந்த சங்கங்களும் தங்கள் விதிகளை திருத்தம் செய்யவில்லைஎன்றும்வேதனை தெரிவித்தார்.

மேலும், "பள்ளிகளில் சாதி இருக்கக் கூடாது என்று முன்னாள் நீதிபதி சந்துரு அளித்த அறிக்கையை அரசு ஏற்றுக் கொண்டபோதும் கூட, பள்ளிகளின் பெயர்களில் இன்னும் சாதி நீடிக்கிறது என்றும், அரசு பள்ளிகளின் பெயர்களில் எப்படி சாதி பெயர் இருக்க முடியும்? என்றும் கேள்வி எழுப்பினார்.

நீதிமன்றம் உத்தரவிட்டாலும் கூட சாதியை தூக்கி பிடிப்பவர்கள் அதனை கைவிட மாட்டார்கள் என்றும், நிலவுக்கே சென்றாலும் சாதியை தூக்கி செல்வார்கள் என்றும் நீதிபதி வேதனை தெரிவித்தார். படிப்படியான மாற்றத்தை கொண்டு வருவதற்கான நேரம் இது என்றும் அவர் கூறினார்.

அதுமட்டுமின்றி, கை ரிக்ஷாவை ஒழித்தது உள்ளிட்ட பல்வேறு சீர்திருத்தங்களை மேற்கொண்ட தி.மு.க. அரசு, இந்த விஷயத்தில் ஒரு முடிவு எடுத்தால் நாளைய வரலாறு அதனை நினைவில் கொள்ளும் என நீதிபதி அறிவுறுத்தினார்.

இதையடுத்து, கல்வி நிறுவனங்களின் பெயர்களில் சாதி பெயரை நீக்குவது தொடர்பான அரசின் நிலைப்பாட்டை தெரிவிக்க கடைசி வாய்ப்பாக மார்ச் 14ந்தேதி வரை அவகாசம் வழங்கிய நீதிபதி, அன்றைய தினம் இது தொடர்பாக நிச்சயம் உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

# காஞ்சிபுரத்தை சேர்ந்த பிரபல ரவுடி படப்பை குணா கைது



காஞ்சிபுரம், மார்ச். 8

காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் அருகே உள்ள மதுர மங்கலத்தை சேர்ந்தவர் பிரபல ரவுடி படப்பை குணா என்கிற குணசேகரன். இவர் மீது காஞ்சிபுரம், செங்கல்பட்டு,திருவள்ளூர்மாவட்டங்களில் கொலை, மிரட்டி பணம் பறித்தல், கட்டப்பஞ்சாயத்து, அடிதடி உள்ளிட்ட 40க்கும் மேற்பட்ட வழக்குகள் உள்ளன. மேலும் சுங்குவார்சத்திரம் போலீஸ் நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளி படப்பை குணா.

இந்த நிலையில், மதுரமங்கலம் கிராமத்தில் நெற்பயிர் சாகுபடி செய்துள்ள விளைநிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்சுவது தொடர்பாக ஏற்பட்ட தகராறில் அதே பகுதியைச் சேர்ந்த மோகன் என்பவரை படப்பை குணா மிரட்டியதோடு, அவரை தாக்கியதாக கூறப்படுகிறது. இது தொடர்பாக மோகன் சுங்குவார்சத்திரம்காவல்நிலையத்தில் புகார் அளித்தார். அந்த புகாரின் பேரில் விசாரணை மேற்கொண்ட சுங்குவார்சத்திரம் போலீசார் ரவுடி குணாவை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி வேலூர் மத்திய சிறையில் அடைத்தனர்.

படப்பை குணா பாஜக காஞ்சிபுரம் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் பிரிவு மாவட்டத் தலைவராக உள்ளார்.

இவர் குண்டர் சட்டத்தில் கைதாகி 6 மாதங்களுக்கு முன்புதான் சிறையில் இருந்து வெளியே வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மதுரை மாவட்டம் பழங்காநத்தம் அருகே உள்ள மதுரை மாநகராட்சி தொடக்கப்பள்ளியின் ஆண்டு விழா




மதுரை, மார்ச். 8

மதுரை மாவட்டம் பழங்காநத்தம் அருகே உள்ள மதுரை மாநகராட்சி தொடக்கப் பள்ளியின் .ஆண்டு விழா நடைபெற்றது இதில் அந்த பள்ளி 1923ல் ஆரம்பிக்கப்பட்டு இன்று வரை சிறப்பாக செயல்பட்டு வந்து கொண்டிருக்கிறது. அதனைத் தொடர்ந்து இந்த பள்ளியின் 102வது வருட நூற்றாண்டுவிழா மற்றும் ஆண்டுவிழா2024, 2025 நடைபெற்றது. இந்த ஆண்டு விழாவில் அப்பள்ளியில் படிக்கும் சிறுவர் சிறுமிகள் அனைவரும் பாட்டு பாடி நடனங்கள் அடி இந்த ஆண்டு விழாவை சிறப்பாக கொண்டாடினர். இந்த விழாவில் சுந்தரலெட்சுமி(பொறுப்பு தலைமை ஆசிரியர்), முத்துலட்சுமி (ஆசிரியர்), விஜயராணி (ஆசிரியர்),பொன் மணி(ஆசிரியர்),சிறப்பாக ஏற்பாடுகள் செய்து இருந்தார்கள் .மேலும் இந்த விழாவிற்கு தலைமை ஆசிரியர்கள் ஆசிரியர்கள் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள் மாணவ மாணவியர்களின் பெற்றோர்கள் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் கலந்து கொண்டு இந்த விழாவினை சிறப்பித்தனர்.

# அக்கச்சிப்பட்டி நடுநிலைப் பள்ளியில் மாணவர் சேர்க்கை விழிப்புணர்வு பேரணி தொடக்கம்: எல்கேஜி முதல் 8ம் வகுப்பு வரை மாணவர் சேர்க்கை




கந்தர்வகோட்டை மார்ச் 8

அக்கச்சிப்பட்டி நடுநிலைப் பள்ளியில் மாணவர் சேர்க்கை விழிப்புணர்வு பேரணி தொடக்கம். எல்கேஜி முதல் எட்டாம் வகுப்பு வரை மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது.

புதுக்கோட்டைமாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியம் அக்கச்சிப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் பள்ளிக்கல்வித்துறையின் வழிகாட்டுதலின் படி 2025 26 ஆண்டுக்கான மாணவர்கள் சேர்க்கைக்கான விழிப்புணர்வுமுன்னாள்ஊராட்சி மன்ற துணைத் தலைவரும், பள்ளி மேலாண்மை உறுப்பினர்முத்துக்குமார் கொடி அசைத்து தொடங்கி வைத்தார். பேரணியில் அக்கச்சிப்பட்டி முழுவதும் பள்ளி வயது குழந்தைகளை எங்கள் பள்ளியில் சேர்க்க வேண்டும் என விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. பெற்றோர்கள் உற்சாகமாக வரவேற்றனர்.

இந்நிகழ்விற்குதலைமை ஆசிரியர் தமிழ்செல்வி தலைமை வகித்தார். கணித பட்டதாரி ஆசிரியர் மணிமேகலை அனைவரையும் வரவேற்றார். தமிழ்நாடு அறிவியல் இயக்க கந்தர்வகோட்டை ஒன்றிய செயலாளரும், பட்டதாரி ஆசிரியர் ரகமதுல்லா அரசு பள்ளியில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து பேசும்போது அக்கச்சிப்பட்டி நடுநிலைப்பள்ளியில்மாணவ, மாணவிகள் கல்வி பயில ஸ்மார்ட் வகுப்பறைகள், நவீன தொழில்நுட்பத்தில் ஹைடெக் ஆய்வகம், திருவள்ளுவர் தமிழ் மன்றமும், ஷேக்ஸ்பியர் ஆங்கில மன்றமும், ராமானுஜம் கணித மன்றமும், ஆல்பிரட் ஐன்ஸ்டீன் அறிவியல் மன்றம், சுற்றுச்சூழல் மன்றம், நுகர்வோர் மன்றம், மகிழ்முற்றம் உள்ளிட்ட மன்றங்கள் சிறப்பாக செயல்பட்டு மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கப் பட்டு வருகிறது. எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு தேசிய வருவாய் வழி திறன் படிப்பு உதவித்தொகை தேர்வுக்கான சிறப்பான முறையில் பயிற்சி அளிக்கப்படுகின்றது. தினசரி தேர்வுகள் மூலம் மாணவர்கள் தயார் செய்யப் பட்டு வருகிறார்கள். தேசிய வருவாய் வழி திறன் படிப்புக்கான உதவித்தொகை தேர்வில் எங்கள் பள்ளிகளை சேர்ந்த மாணவர்கள் இது வரை நான்கு பேர் தேர்வு பெற்றுள்ளனர் .

துளிர் திறனறிவுத் தேர்வு, அறிவியல் ஒளி தேர்வில் வெற்றி பெற்று கல்வி சுற்றுலா சென்று வந்துள்ளனர்.

அறிவியல் ஆய்வகம் மூலம் மாணவர்களுக்கு அறிவியல் மனப்பான்மை வளரக்கூடிய வகையில் அறிவியல் பரிசோதனைகள் மூலம் கற்பிக்கப்படுகிறது. போட்டித் தேர்வு எழுதக் கூடிய மாணவர்களுக்க பயிற்சி, தமிழில் சிறந்த கையெழுத்து பயிற்சி, ஆங்கிலத்தில் பேச்சு பயிற்சிகள் உள்ளிட்ட பயிற்சிகள் தொடர்ந்து அளிக்கப் பட்டு வருகிறது. மாணவர்களின் தனித்திறமைகளை வெளிப்படுத்தக்கூடிய வகையில் கலைத் திருவிழா, போட்டிகளில் ஒன்றிய அளவில் வெற்றி பெற்று மாவட்ட அளவில்கலந்துகொண்டு சிறப்பு சேர்த்துள்ளனர். சிறப்பான மன்ற செயல்பாடுகள் மூலம் தங்களுடைய திறமைகளை மாணவர்கள் வெளிப்படுத்துகின்றனர். தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் சார்பில் நடைபெறக்கூடிய துளிர் திறனறிவுத் தேர்வு, தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாட்டில் ஆய்வு கட்டுரை சமர்ப்பித்தல், வினாடி வினா, மேலும் தேசிய அறிவியல் தினம், பறவைகள் தினம் ,மகளிர் தினம் முதல் தினந்தோறும் நடைபெறக்கூடிய முக்கிய தினங்கள் கொண்டாடப்பட்டு மாணவர்களுக்கு பொது அறிவு கற்று தரப்படுகிறது. தற்போது எங்கள் பள்ளியில் எல்கேஜி முதல் எட்டாம் வகுப்பு வரை மாணவர் சேர்க்கை நடைபெற்று வருகிறது. பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை அக்கச்சிப்பட்டியில் சேர்க்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம். தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்ட வரும் எண்ணும் எழுத்தும் திட்டம், இல்லம் தேடிக் கல்வித் திட்டம், வானவில் மன்ற செயல்பாடுகள், காலை உணவு திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறோம். எங்கள் பள்ளி நூலகத்தில் ஆயிரத்திற்கு மேற்பட்ட நூல்கள் ,தினசரி செய்தித்தாள்கள், பருவ இதழ்கள் மூலம் மாணவர்களுடைய அன்றாட நடப்புநிகழ்வுகளை அறிந்து கொள்கின்றனர். காலை உணவு திட்டம் கல்வியில் சிறப்பான முன்னேற்றத்தை ஏற்படுத்தி வருகிறது.

தேன் சிட்டு, ஊஞ்சல் சிறார் இதழ்கள் மூலம் வாசிப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது. அரசுப் பள்ளியில் ஆறு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை பயிலக்கூடிய மாணவர்களுக்கு தமிழ் புதல்வன் புதுமைப்பெண், அரசு பள்ளியில் பயிலக்கூடிய மாணவர்களுக்கு உயர் கல்வியில் மருத்துவம் பொறியியல் உள்ளிட்ட படிப்புகளில் 7 .5 இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது. அரசு வேலை வாய்ப்புகளில் ஒன்று முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலக் கூடிய மாணவர்களுக்கு 20% இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது. எனவே பெற்றோர்கள் எங்கள் பள்ளியில் குழந்தைகளை சேர்த்து பயனடையுமாறு கேட்டுக் கொள்கிறோம். இந்நிகழ்வில் ஆசிரியர்கள் சிந்தியா, நிவின், வெள்ளைச்சாமி, ஜெம்ம ராகினி சகாய ஹில்டா, பள்ளிமேலாண்மைக்குழுஉறுப்பினர்கள் பெற்றோர்கள், முருகனாந்தம், பிரியா தேவி, நிர்மலா, பிரியா ,சுதா, உள்ளிட்டகலந்துகொண்டனர்.

# ஒரு கோடி ஓட்டு பா.ஜ.க.வுக்கு கிடைத்ததா? அண்ணாமலைக்கு அமைச்சர் கேள்வி





சென்னை, மார்ச். 8

சைதாப்பேட்டை கலைஞர் கருணாநிதி பொன்விழா வளைவு உள்ளபஜார்சாலையிலும், ஜீனிஸ் சாலையிலும் ரூபாய் 2.39 கோடி செலவில் அமைக்கப்பட உள்ள மழைநீர் வடிகால் கட்டும் பணியினைச் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து சைதாப்பேட்டை அரசு மகப்பேறு மருத்துவமனையில் சைதை மேற்கு பகுதி தி.மு.க. மருத்துவர் அணி சார்பில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு மார்ச் 1 முதல் 5ந்தேதி வரை பிறந்த 6 குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்கும் நிகழ்வில் குழந்தைகளுக்கு மோதிரம் வழங்கினார்.

இதில் பகுதி செயலாளர்கள் கிருஷ்ணமூர்த்தி, துரைராஜ் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டார்கள்.

பின்னர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் நிருபர்களிடம் கூறியதாவது:

சென்னையில் இதற்கு முன்பு எல்லாம் 4, 5 சென்டி மீட்டர் மழை பெய்தாலும் பெரிய அளவில் வெள்ள பாதிப்பு ஏற்படும் வாரக்கணக்கில் மழைநீர் தேக்கம் என்பது இருக்கும்.

ஆனால் கடந்த ஆண்டு மிகப்பெரிய மழை ஒரே நாளில் 20 சென்டிமீட்டர் மழை பெய்தும்கூட 24 மணி நேரத்தில் மழை பெய்த சுவடு தெரியாத அளவிற்கு சென்னை மாநகரம் மிகப்பெரிய மாற்றத்தை பெற்றது.

சைதாப்பேட்டையில் சிறிய அளவில் மழை பெய்தாலும் கூட சுப்பிரமணிய தெரு, ஜோதி ராம் நகர், சாரதி நகரில் பெரிய அளவில் மழை பாதிப்புகள் இருந்தது கடந்த மூன்று ஆண்டுகளாக மழைநீர் கல்வாய் கட்டப்பட்ட விளைவாக சைதாப்பேட்டையில் எந்த பகுதியிலும் மழைநீர் பாதிப்பு இல்லாத சூழல் ஏற்பட்டது.

மும்மொழி கொள்கைக்கு ஆதரவாக பா.ஜ.க. கையெழுத்து இயக்கம் நடத்தி இருப்பதற்கு ஆதரவு பெருகி இருப்பதாக அண்ணாமலை கூறியிருக்கிறார்.

பா.ஜ.க.வுக்கு எங்கு மக்கள் ஆதரவு தெரிவித்திருக்கிறார்கள், ஏற்கனவே ஆன்லைனில் உறுப்பினர் சேர்க்கை நடைபெற்ற பொழுது ஒரு கோடி பேர் சேர்ந்தனர் என்று கூறினார்கள் ஆனால் எவ்வளவு வாக்கு வந்தது ஒரு கோடி உறுப்பினர்கள் வாக்களித்தார்களா?

தேர்தல் நெருங்குவதால் இப்போது அமலாக்கத்துறை போன்ற சோதனைகளை நடத்துவார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

# 2026 தேர்தலுக்காக மொழி பிரச்சனையை தி.மு.க. மீண்டும் உருவாக்குகிறது பொன்.ராதாகிருஷ்ணன் குற்றச்சாட்டு

நாகர்கோவில், மார்ச். 8

முன்னாள் மத்திய மந்திரி பொன். ராதாகிருஷ்ணன் நாகர்கோவிலில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

தி.மு.க.வினர் 1967க்கு பிறகு 2026 தேர்தலை பயன்படுத்தி குறுகிய நோக்கத்துடன் மொழி பிரச்சனையை மீண்டும் உருவாக்கி உள்ளனர். தாய் மொழியில் கல்வி படிக்க வேண்டும். அத்துடன் ஆங்கிலம் படிக்க வேண்டும். 3வதாக விரும்பிய மொழியை குழந்தைகள் படிக்க வேண்டும்.

பெருந்தலைவர் காமராஜர் பள்ளிக்கூடங்களை திறந்தார். இலவச கல்வியை தந்தார். ஆனால் அதைப்பற்றி யாரும் கவலைப்படவில்லை. தற்போது அரசு பள்ளிகளில் எத்தனை மாணவர்கள் படித்து வருகிறார்கள், எத்தனை ஆசிரியர்கள் உள்ளனர், அரசு பள்ளியின் தரம் எப்படி உள்ளது? என்று பார்க்க வேண்டும்.

அரசு பள்ளிகள் மூடப்பட்டு தனியார் பள்ளிகள் திறக்கப்பட்டு வருகிறது. முதலமைச்சர் குழந்தைகளை அப்பா என்று கூறுமாறு கூறியது சந்தோஷமான ஒன்று தான். அவர் தந்தை ஸ்தானத்திலிருந்து சிந்தித்து செயல்பட வேண்டும்.

தி.மு.க. மிகப்பெரிய போரைதமிழ்குழந்தைகள் மீது திணிக்க தொடங்கியுள்ளது. தமிழை தி.மு.க. அழித்து வருகிறது. தமிழர் என்ற உணர்வு இல்லாமல் தற்போது ஆங்கிலம் பேசும் நிலை தான் தற்பொழுது உள்ளது. குழந்தைகளின் கல்வியில் விளையாடக் கூடாது.

மத்திய அரசு எந்த திட்டத்திற்கு நிதி ஒதுக்குகிறதோ அந்த திட்டத்திற்கு தான் அந்த நிதியை பயன்படுத்த வேண்டும். வேறு திட்டத்திற்கு பயன்படுத்தக்கூடாது. தமிழகத்திற்கு மத்திய



அரசு நிதி வழங்கி வருகிறது. தமிழகத்தில் போதை பொருள் பழக்கம் அதிகரித்து வருகிறது. உயிரை மாய்த்துக்கொள்ளும் அளவிற்கு விஷத்தன்மை வாய்ந்த போதைப் பொருட்கள் புழக்கத்தில் உள்ளன.

மும்மொழி கொள்கைக்கு ஆதரவாக அரசு பள்ளி மாணவரிடம் கையெழுத்து வாங்குவதாக கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் கூறியுள்ளதாக கூறுகிறீர்கள். ஒரு அமைச்சர் இப்படி கூறக்கூடாது. அவர் தனது பதவியை ராஜினாமா செய்ய வேண்டும்.

துணை முதலமைச்சர் பொறுப்புடன் இருக்க வேண்டும். அவருக்கு அதிக இடத்தை முதல்வர் கொடுத்து வருகிறார். முதலமைச்சர் புகைப்படங்கள்இருக்கும் இடங்களில் எல்லாம் துணை முதலமைச்சர் புகைப்படங்களும் இருந்து வருகிறது. ரேஷன் கடைகளிலும் 2 படங்களும் பொருத்தப்பட்டுள்ளது.

ஆனால் மோடியின் படம் தான் ரேஷன் கடைகளில் இருக்க வேண்டும். மத்திய அரசு அரிசி வழங்கி வருகிறது. ஆனால் தமிழக அரசு விநியோகம் செய்து வருகிறது. கொடுப்பவர் படம் இல்லை. விநியோகம் செய்பவரின் படம் மட்டும் ரேஷன் கடைகளில் உள்ளது. தொகுதி சீரமைப்பு கூட்டத்திற்கு வந்தவர்கள் எல்லாம் வாழ்த்த வந்தவராக மட்டும் கருதக்கூடாது. வீழ்த்துவதற்காகவும் வந்திருக்கலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# சென்னை மாநகராட்சி பட்ஜெட் 19ந்தேதி தாக்கல்

சென்னை, மார்ச். 8

சென்னை மாநகராட்சி பட்ஜெட் கூட்டம் வருகிற 19ந் தேதி நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் வரி விதிப்பு மற்றும் நிலைக்குழு தலைவர் சர்பா ஜெயாதாஸ் 2025 2026ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்கிறார். மேயர் ஆர்.பிரியா புதிய திட்டங்கள் வளர்ச்சி பணிகள் குறித்த அறிவிப்பை பை



வெளியிடுகிறார்.

இந்த பட்ஜெட்டில் புதிய திட்டங்கள் வளர்ச்சி பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. சிங்கார சென்னை திட்டத்தின் கீழ் அழகுப்படுத்தும் பணிகள், அதிகரித்து வரும் போக்குவரத்து, நெரிசலை குறைக்க புதிய மேம்பாலங்கள்உள்ளிட்ட பல்வேறு சிறப்பு திட்டங்கள் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பட்ஜெட் மீதான விவாதம் 21ந் தேதி நடைபெறுகிறது.

# போகிற போக்கில் மிதித்து தள்ளிவிடுவேன்: பாண்டியராஜனை மிரட்டிய கே.டி.ராஜேந்திர பாலாஜி

சென்னை, மார்ச். 8

பாண்டியராஜன் கூறுவது போல் நான் குறுநில மன்னன்தான்.

நான் தெய்வமாக நினைக்கும் ஜெயலலிதா குறித்து பாண்டியராஜன் அவதூறாக பேசிய வீடியோ என்னிடம் உள்ளது.

சிவகாசியில் நடைபெற்ற அ.தி.மு.க. கூட்டத்தில் பேசிய முன்னாள் அமைச்சர் கே.டி.ராஜேந்திர பாலாஜி முன்னாள் அமைச்சர் பாண்டியராஜனுக்கு ஒருமையில் பேசி மிரட்டல் விடுத்துள்ள சம்பவம் பெரும்



பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. கூட்டத்தில் கே.டி.ராஜேந்திர பாலாஜி கூறியதாவது:

★ கட்சியில் மரியாதை வேண்டும் என கேட்பவர்கள் கட்சிக்கு செய்தது என்ன?

★ தடை இருந்தால வெட்டி எறிந்து விடவும் தயங்க மாட்டேன்.

★ பாண்டியராஜன் கூறுவது போல் நான் குறுநில மன்னன்தான்.

★ போகிற போக்கில் மிதித்துதள்ளிவிடுவேன்.

★ எனக்குள் ஓடுவது அ.தி.மு.க. ரத்தம். உன் உடலில் ஓடுவது என்ன ரத்தம்?

★வெவ்வேறுகட்சியில் இருந்து வந்தவர் பாண்டியராஜன்.

★ நான் தெய்வமாக நினைக்கும் ஜெயலலிதா குறித்து பாண்டியராஜன் அவதூறாக பேசிய வீடியோ என்னிடம் உள்ளது.

★நான்இருக்கும்போது பாண்டியராஜனுக்கு மேடையில் சால்வை போட்டால் நான் வேடிக்கை பார்ப்பதா?

★ தன்னை குறுநில மன்னன் என விருதுநகரில் வந்த கூற முடியுமா? என்று கூறினார்.

# இரண்டாம் கட்ட மெட்ரோ ரெயில் நிலையங்களில் வசதிகளை மேம்படுத்த ஒப்பந்தம் கையெழுத்து

சென்னை, மார்ச். 8

சென்னை மெட்ரோ ரெயில் நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

சென்னை மெட்ரோ ரெயில்நிறுவனம்கட்டம் IIல் 15 மெட்ரோ நிலையங்களுக்கான வடிவமைப்பை மதிப்பாய்வு செய்து அனைவரும் பயன்படுத்தும்வகையில் மேம்படுத்துவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

இது மாற்றுத்திறனாளிகள் உட்பட அனைத்து பயணிகளும் எளிதாக அணுகக்கூடியவகையில் வசதிகளை மேம்படுத்துவதை உறுதி செய்கிறது.

இந்தியாவின் சீரான வழிகாட்டுதல்களுக்கு ஏற்ப நிலைய வடிவமைப்புகளை மேம்படுத்துவதற்காக,



இந்த ஒப்பந்தம் M/s vshesh Learning Services Private Limited நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் பிப்ரவரி 18, 2025 அன்று வழங்கப்பட்ட ஏற்பு கடிதத்திலிருந்து 180 நாட்களுக்குள் முடிக்கப்பட உள்ளது.

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் சார்பாகதலைமை பொது மேலாளர் ரேகாபிரகாஷ், (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு), மற்றும் M/s vshesh Learning Services Private நிறுவனத்தின் சார்பாக இயக்குநர் மற்றும் இணை நிறுவனர் P.ராஜசேகரன் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இந்நிகழ்ச்சியில், சென்னை மெட்ரோ ரெயில்நிறுவனம் மற்றும் ஒப்பந்ததாரர்கள் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் எளிதாக அணுகக்கூடிய போக்குவரத்து அமைப்பை உருவாக்க உறுதி பூண்டுள்ளது. இந்த தொலைநோக்குப் பார்வைக்கு ஏற்ப, இரண்டாம் கட்ட மெட்ரோ ரெயில் நிலையங்கள் அனைவரும் அணுகக்கூடியவகையில் சீரான வழிகாட்டுதல்கள் மற்றும் தரங்களுக்கு ஏற்ப நுணுக்கமாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

கட்டம்IIல்15மெட்ரோ ரெயில் நிலையங்களில் வடிவமைப்பை மதிப்பாய்வு செய்வதற்காக M/s vshesh Learning Services Private ஆலோசனை நிறுவனம், கட்டம் I ல் செயல்பாட்டில் உள்ள 32 மெட்ரோ ரெயில் நிலையங்களில் தணிக்கையை மேற்கொண்டுள்ளது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தீவுத்திடலில் ரூ.113 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும் பொது சதுக்கப் பணிகள்: முதல்அமைச்சர் நேரில் ஆய்வு

சென்னை, மார்ச். 8

தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று சென்னை, தீவுத்திடலில், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 113 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தரைதளம் மற்றும் இரண்டு தளங்களுடன் 1,63,039 சதுர அடி கட்டடப் பரப்பளவில் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய கண்காட்சி மையத்தை உள்ளடக்கிய பொது சதுக்கப் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



சென்னையின் முக்கிய அடையாளமாகிய நேப்பியர் பாலத்தின் அருகில் தீவுத்திடலில் சுமார் 4 ஏக்கர் பரப்பளவில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறையின் கீழ், சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் சார்பில் 113 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன தொழில் நுட்ப வசதிகளுடன் கூடிய கண்காட்சி மையம் உள்ளடக்கிய பொது சதுக்கம் அமைக்கப்பட்டு வருகிறது. இக்கண்காட்சி மையம், நமது பாரம்பரிய மிக்க கட்டடக்கலை அமைப்புடன், 40 கண்காட்சி அரங்குகள், பொது நிகழ்ச்சி கூடங்கள், உணவகங்கள், 8 மின்தூக்கி வசதிகள், 148 நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் 148 இருசக்கர வாகனங்கள் நிறுத்துவதற்கான இட வசதிகள் மற்றும் 200 நவீன கழிப்பிட வசதிகளுடன் கட்டப்பட்டு வருகிறது.

இக்கண்காட்சி மையம், நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் நிரந்தர மையமாக அமைக்கப்படுவதால், அரசின் பல்வேறு துறைகளின் செலவினங்கள் குறைக்கப்படுவதுடன், மக்களுக்கு தேவையான, அனைத்து மேம்பட்ட வசதிகளுடன் அமைக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம், அரசு துறைகளின் கண்காட்சிகள், கருத்தரங்குகள், பண்பாட்டு நிகழ்ச்சிகள் போன்ற அனைத்து பொது நிகழ்ச்சிகளும் இம்மையத்தில்நடத்தப்படும்.

இந்த ஆய்வின்போது, அமைச்சர்கள் க. பொன்முடி, பி.கே.சேகர்பாபு, சென்னை மாநகராட்சி மேயர்பிரியா, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் காகர்லா உஷா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# த.வெ.க. சார்பில் இப்தார் நிகழ்ச்சி நோன்பு கஞ்சி, பிரியாணி ரெடி



சென்னை, மார்ச். 8

சென்னை ராயப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் தமிழக வெற்றிக்கழகம் சார்பில் இஃப்தார்நோன்பு திறக்கும் நிகழ்ச்சி இன்று மாலை நடைபெற உள்ளது. இந்நிகழ்ச்சியில் அக்கட்சியின் தலைவர் விஜய் பங்கேற்க உள்ளார். நோன்பு திறப்பு நிகழ்ச்சியில் மாவட்டத்திற்கு 5 இஸ்லாமிய நிர்வாகிகள் உட்பட மொத்தம் 1,500 பேர் பங்கேற்க உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

மாலை நோன்பு திறந்த பிறகு தமிழக வெற்றிக்கழகம் சார்பில் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக சுமார் 2000 பேருக்கு மட்டன் பிரியாணி, சிக்கன் 65, வெஜ் சமோசா, நோன்பு கஞ்சிதயாரிக்கும் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை த.வெ.க. பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த், தேர்தல் பிரச்சார மேலாண்மை பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜுனன் ஆகியோர் பார்வையிட்டனர்.

இதனிடையே, இந்த நிகழ்ச்சி மாலை 6.20 மணிக்கு தொடங்கி ஒரு மணி நேரம் நீடிக்கும் என்றுசொல்லப்படுகிறது. இஸ்லாமியர்களின் வழிமுறைப்படிவிஜய்யும் இன்று ஒரு நாள் முழுமையாக நோன்பு இருந்து தொழுகை செய்து இப்தார்விருந்தைஎடுத்துக் கொள்ளஉள்ளதாகதகவல் வெளியாகி உள்ளது.

# சுட்டெரிக்கும் வெயில் எதிரொலி கன்னியாகுமரிக்கு சுற்றுலா பயணிகள் வருகை குறைந்தது

கன்னியாகுமரி, மார்ச். 8

சுற்றுலா தலமான கன்னியாகுமரிக்கு தினமும் ஆயிரக்கணக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வந்து செல்கிறார்கள். இங்கு வருடம் முழுவதும் சுற்றுலா பயணிகள் வந்து சென்றாலும் நவம்பர், டிசம்பர், ஜனவரி ஆகிய 3 மாதங்களும் சபரிமலை சீசனையொட்டியும் ஏப்ரல், மே ஆகிய 2 மாதங்களும் கோடை விடுமுறை சீசனையொட்டியும் அதிக அளவு சுற்றுலா பயணிகள் வந்து செல்வார்கள். இது தவிரபண்டிகைவிடுமுறை காலங்களிலும் வாரத்தின் கடைசி விடுமுறை நாட்களான சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை



போன்ற நாட்களிலும் சுற்றுலா பயணிகளின் கூட்டம் அலைமோதும்.

இந்த நிலையில் பள்ளிக்கூடங்களில் பிளஸ்2 மற்றும் பிளஸ்1 வகுப்புகளுக்கு பொதுத்தேர்வு நடைபெறுவதாலும், கடுமையான சுட்டெரிக்கும் கோடை வெயிலின் தாக்கத்தினாலும் கன்னியாகுமரிக்கு தற்போது சுற்றுலா பயணி வருகை அடியோடு நின்றுபோய் விட்டது. குறிப்பாக வட மாநில சுற்றுலா பயணிகளின் வருகையும் குறைந்துவிட்டது. இதனால் கன்னியாகுமரியில் எப்போதும் பரபரப்பாக காணப்படும் முக்கடலும் சங்கமிக்கும் திரிவேணி சங்கமம் சங்கிலித்துறை கடற்கரை பகுதி மற்றும் கடற்கரை சாலை சுற்றுலா பயணிகள் நடமாட்டம் இன்றி வெறிச்சோடி காணப்படுகிறது.

மேலும் சுற்றுலா தலங்களும் ஆட்கள் நடமாட்டம் இன்றி களை இழந்து காணப்படுகிறது. விவேகானந்தர் மண்டபத்தை பார்வையிட செல்லும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருவதால்விவேகானந்தர் மண்டபத்துக்கு 2 படகு மட்டுமேஅவ்வப்போதும் இயக்கப்பட்டு வருகிறது.

மேலும் கன்னியாகுமரியில் சூரியன் உதயமாகும் காலை நேரத்திலும் சூரியன் மறையும் மாலை நேரத்திலும்கடற்கரையில் சுற்றுலா பயணிகள் கூட்டம் குறைந்த அளவே காணப்படுகிறது.

# QR குறியீடு ஒட்டிய பிறகு அதை நீக்கினால் நடவடிக்கை எடுக்கப்படும் காவல் ஆணையர்

சென்னை, மார்ச். 8

பாதுகாப்பிற்கு ஆபத்து நேரிட்டால் இந்த க்யூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்து காவல் கட்டுப்பாட்டு அறைக்கு SOS தகவல் அனுப்ப முடியும்.

சென்னையில் இயக்கப்படும் அனைத்து வாடகை வாகனங்களும் இந்த க்யூஆர் குறியீட்டை ஒட்டுவது கட்டாயமாகப்பட்டுள்ளது.

சென்னை தலைமை செயலகத்தில்நடைபெற்ற நிகழ்ச்சியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆட்டோக்கள், வாடகை கார்களுக்கு காவல் உதவி க்யூஆர் குறியீடுகளை வழங்கினார். ஆட்டோ, கார்களில் செல்லும் சமயத்தில் ஆபத்து நேரிட்டால் பொதுமக்கள் காவல்துறையை எளிதாக அணுக இந்த க்யூஆர்



குறியீடு உதவி புரியும்.

சென்னை மாநகர காவல்துறை ஆணையர் அருண் செய்தியாளர்களிடம் கூறுகையில்,

ஆட்டோ, கார்களில் செல்லும் சமயத்தில் பாதுகாப்பிற்கு ஆபத்து நேரிட்டால் இந்த க்யூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்து காவல் கட்டுப்பாட்டு அறைக்கு SOS தகவல் அனுப்ப முடியும்.

வாடகைவாகனங்களில் பயணம் செய்யும் பெண்களின் பாதுகாப்பிற்கு ஏதாவது அச்சம் ஏற்பட்டால் உடனடியாக வாடகை வாகனங்களில் ஒட்டப்பட்டுள்ள காவல்துறை க்யூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்து, காவல்துறை எஸ்ஓஎஸ் செயலியில் தொடர்பு கொண்டால், உடனடியாக அந்த வாகனம் எங்கே சென்று கொண்டிருக்கிறது என்பதை காவல்துறை கட்டுப்பாட்டு மையத்திலிருந்து கண்காணித்து அருகே உள்ள ரோந்து வாகனத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டு உதவி தேவைப்படுபவருக்கு உடனடியாக உதவி செய்யப்படும்.

வாகனம் சென்று கொண்டிருக்கும் இடம், ஓட்டுநர் உள்ளிட்ட தகவல்களை எளிதில் காவல்துறையினர் அறிய இந்த க்யூஆர் குறியீடு உதவிகரமாக அமையும்.

சென்னையில் இயக்கப்படும் அனைத்து வாடகை வாகனங்களும் இந்த க்யூஆர் குறியீட்டை ஒட்டுவது கட்டாயமாக்கப்ப ட்டுள்ளது.

க்யூஆர் குறியீடு ஒட்டிய பிறகு அதை நீக்கினால் வாகன ரோந்தின்போது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

# புழல் சிறை சிறப்பாக பராமரிக்கப்படுகிறது தமிழக அரசுக்கு ஐகோர்ட்டு பாராட்டு




சென்னை, மார்ச். 8

சென்னை ஐகோர்ட்டில் ஆட்கொணர்வு வழக்குகளை விசாரித்து வரும் நீதிபதிகள் எம்.எஸ்.ரமேஷ் மற்றும் என்.செந்தில்குமார் ஆகியோர் சென்னை புழல் மத்திய சிறையில் திடீர் சோதனை நடத்தினர்.

இதைத் தொடர்ந்து, தமிழக அரசின் தலைமை குற்றவியல் வழக்கறிஞர் அசன் முகமது ஜின்னாவிடம், புழல் சிறையில் ஆய்வு மேற்கொண்டது தொடர்பாக தங்களது கருத்துகளை நீதிபதிகள் பகிர்ந்து கொண்டனர்.

சிறை அதிகாரிகளுக்கு முன்கூட்டியே தகவல் தெரிவிக்காமல் புழல் சிறையின் அனைத்து பகுதிகளுக்கும் நடந்து சென்றே சோதனை நடத்தியதாகவும், சிறையின் அனைத்து பகுதிகளும் தூய்மையாக இருந்ததாகவும் நீதிபதிகள் கூறினர்.

மேலும், கைதிகளுக்கான உணவை சாப்பிட்டு பரிசோதித்து பார்த்த போது உணவு தரமானதாகவும், சுவையாகவும், இருந்ததாகவும் நீதிபதிகள் தெரிவித்தனர். அதே போல் கொடுங்குற்றத்திற்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ள கைதிகளை சந்தித்தபோது, அவர்களும் சிறை வசதிகள் குறித்து திருப்தி தெரிவித்ததாக நீதிபதிகள் குறிப்பிட்டனர்.

புழல் சிறை சிறப்பாக பராமரிக்கப்படுவதாகவும், உணவு உள்ளிட்ட வசதிகள் நல்ல முறையில் செய்யப்பட்டுள்ளதாகவும் தமிழக அரசுக்கு நீதிபதிகள் பாராட்டு தெரிவித்தனர்.

அதோடு, சிறை வசதிகளை மேம்படுத்துவது தொடர்பாக சில யோசனைகளை வழங்க இருப்பதாகவும், அது தொடர்பாக தாமாக முன் வந்து வழக்கை விசாரணைக்கு எடுக்க உள்ளதாகவும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

இதற்கு தலைமை குற்றவியல் வழக்கறிஞர் அசன் முகமதுஜின்னா, கோர்ட்டு தாமாக முன் வந்து வழக்கை விசாரித்து எந்த ஆலோசனைகளை வழங்கினாலும் அதனை செயல்படுத்த அரசு தயாராக இருப்பதாக பதிலளித்தார்.

சிறைகளின் வசதிகளை தமிழக அரசு சர்வதேசதரத்தில் உயர்த்தி உள்ளதாகவும், கோவை மத்திய சிறையில் உள்ள திறந்தவெளி சிறைச்சாலை மூலம் விவசாயம் சிறப்பாக நடைபெறுவதாகவும் சுட்டிக்காட்டிய அவர், சிறை பெட்ரோல் நிலையம் மூலம் குறைந்த விலையில் பொதுமக்களுக்கு பெட்ரோல், டீசல் வழங்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

# தமிழக ஐ.பி.எஸ். அதிகாரி சுதாகர் மத்திய அரசு பணிக்கு மாற்றம்



சென்னை, மார்ச்.8

தமிழககாவல்துறையில் பணியாற்றும் ஐ.பி.எஸ். அதிகாரியான சுதாகர் தற்போது சென்னை போக்குவரத்து காவல்துறை கூடுதல் ஆணையராக பணியாற்றி வருகிறார். இந்தநிலையில் சுதாகர் தற்போது மத்திய அரசு பணிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மத்திய போதைப்பொருள் தடுப்பு பிரிவின் துணை இயக்குநராக சுதாகரை நியமித்து மத்திய உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது. 5 ஆண்டுகளோ அல்லது மறு உத்தரவு பிறப்பிக்கப்படும் வரையிலோ சுதாகர் அந்தப் பதவியில் பணியாற்றுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழக அரசு மக்காச்சோளம் மீது விதித்துள்ள செஸ் வரியை திரும்ப பெற வேண்டும் ஜி.கே. வாசன்




சென்னை, மார்ச். 8

தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜி.கே. வாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தமிழக அரசு, வேளாண் வணிகம் மற்றும் விற்பனை சம்பந்தமாக விவசாயிகளின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும். வேளாண் விற்பனை குழுக்கள் மூலமாக 40க்கும் மேற்பட்ட விவசாய உற்பத்திப்பொருட்களுக்கு 1 சதவீத செஸ் வரி ஏற்கனவே வசூலிக்கப்படுகிறது. மக்காச்சோளத்திற்கு ஏற்கனவே திருப்பூர், ஈரோடு, கோவை, நாகை மாவட்டங்களில் 1 சதவீத செஸ் வரி வசூலிக்கும் நடைமுறை உள்ளது.

தற்போது நாமக்கல், சேலம், விழுப்புரம், அரியலூர், திருவள்ளூர், விருதுநகர், கடலூர், திண்டுக்கல், காஞ்சிபுரம், மதுரை, பெரம்பலூர், கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், தேனி, திருச்சி, திருவண்ணாமலை, வேலூர், செங்கல்பட்டு ஆகிய 18 மாவட்டங்களிலும் உற்பத்தி செய்யப்பட்டு விற்கப்படும் மக்காச்சோளத்திற்கு 1 சதவீத செஸ் வரியை விதித்துள்ளது. இதனால் விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள். எனவே இந்த வரி விதிப்பை திரும்ப பெற வேண்டும்.

அதாவது விவசாயிகள் நேரடியாக விவசாய நிலங்களில் வியாபாரிகளுக்கு விற்கும் பொருட்களுக்கு செஸ் வரி விதிப்பு என்பது ஏற்புடையதல்ல என விவசாயிகள் தெரிவித்துள்ளனர். அதாவது வேளாண் விற்பனை வளாகத்திற்கு உள்ளே நடைபெறும் விற்பனைக்கு 1 சதவீத செஸ் வரி விதிப்பு ஏற்புடையது என்கின்றனர் விவசாயிகள். குறிப்பாக விற்பனைக்குழு வளாகத்திற்கு வெளியே விவசாயிகள் நேரடியாக விவசாய நிலத்திலிருந்து வியாபாரிகளுக்கு விற்பதற்கு வரி விதித்திருப்பது, வரி கட்டாமல் செல்லக்கூடியவாகனங்களைபிடித்து அபராதம் விதிப்பது ஆகியவற்றால் கிராமத்திற்கு வியாபாரிகள் வராமல் 22 மாவட்ட மக்காச்சோளம் விற்பனையாகாமல் தேக்கமடைந்துள்ளது. இதனால் விவசாயிகளுக்கு வருமானம் ஈட்டுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

உள்நாட்டு மக்காச்சோளத்திற்கு 1 சதவீத செஸ் வரி விதித்து, மக்காச்சோளத்தின் விலையை அதிகரிக்கச்செய்து மக்காச்சோளத்தை விற்க முடியாத அளவிற்கு விவசாயிகள் மீது சுமையை ஏற்றியுள்ளது தமிழக அரசு. ஒரு குவிண்டால் மக்காச்சோளம் ரூ.3,500க்கு விற்றால் மட்டுமே விவசாயிகள் பயன்பெறக்கூடிய நிலையில், தற்போது ரூ.2,800க்கு விற்று வந்த மக்காச்சோளம், இப்போதைய செஸ் வரி விதிப்பால் ரூ.2,300 க்கு விற்கப்படுகிறது. இதனால் ஒரு குவிண்டாலுக்கு ரூ.500 நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் தமிழக அரசே.

எனவே தமிழக அரசு, வேளாண்மை துறைக்கு உட்பட்டு செயல்படும் வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை விதித்திருக்கக்கூடிய 1 சதவீத செஸ் வரியை வேளாண் விற்பனைக்குழு வளாகங்களில் மட்டும் வசூலிக்க வேண்டும் என திருத்தம் செய்யவும், வேளாண் விற்பனை வணிகத்துறையின் பட்டியலிடப்பட்டுள்ள 40 பொருட்களுக்கும், விவசாய நிலங்களில் விவசாயிகள், வியாபாரிகள் இடையே நேரடியாக நடைபெறும் விற்பனைக்கு முழுமையாக வரி விலக்களிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழ் மாநில காங்கிரஸ் (மூ) சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# வீட்டுக்கு அழைத்து மாணவர்களுக்கு பாலியல் தொல்லை கொடுத்த அரசு பள்ளி ஆசிரியர் போக்சோவில் கைது



திருவாரூர், மார்ச். 8

திருவாரூர் மடப்புரம் பகுதியை சேர்ந்தவர் சீனிவாசன்(வயது 52). இவர், திருவாரூர் அருகே உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் ஆங்கில ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார். கடந்த 2 நாட்களுக்கு முன்பு 9ம் வகுப்பு படிக்கும் மாணவர்கள் 2 பேரை விடைத்தாள் திருத்துவதற்கு உதவி செய்ய வேண்டும் என கூறி ஆசிரியர் சீனிவாசன் தனது வீட்டுக்கு வரவழைத்துள்ளார்.

அப்போது சீனிவாசன் அந்த மாணவர்களின் உதட்டில் முத்தமிடுவது உள்பட பல்வேறு பாலியல் சீண்டல்களில் ஈடுபட்டுள்ளார். இதனால் மனவேதனை அடைந்த மாணவர்கள் நடந்த சம்பவம் குறித்து தங்களது பெற்றோரிடம் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து மாணவர்களின் பெற்றோர், பள்ளிக்கு நேரடியாக வந்து ஆசிரியர் நடந்து கொண்டது குறித்து முறையிட்டனர்.

இதனிடையே பாதிக்கப்பட்ட மாணவரின் உறவினர் ஒருவர் 1098 என்ற தொலைபேசி எண் மூலமாக குழந்தைகள் பாதுகாப்புஅலகிற்குதொடர்பு கொண்டு புகார் தெரிவித்தார்.

அதன்பேரில் குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்கள் சம்பந்தப்பட்ட மாணவர்களிடம் நேரடியாக விசாரணை நடத்தினர். விசாரணையில் ஆசிரியர், மாணவர்களிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்டது தெரிய வந்தது.

இதுதொடர்பாக திருவாரூர் அனைத்து மகளிர் போலீசில் குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்கள் புகார் கொடுத்தனர். அதன்பேரில் போலீசார், ஆசிரியர் சீனிவாசன் மீது போக்சோசட்டத்தின்கீழ் வழக்குப்பதிவு செய்து அவரை கைது செய்தனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## கிங்ஸ்டன் 2 அப்டேட் கொடுத்த ஜி.வி.பிரகாஷ்!




இயக்குனர் கமல் பிரகாஷ் எழுதி, இயக்கியுள்ள படம் 'கிங்ஸ்டன்'. இந்த படத்தில் ஜி.வி.பிரகாஷ் மற்றும் திவ்யபாரதி இணைந்து நடித்துள்ளனர். இது ஜி.வி. பிரகாஷ் தயாரிக்கும் முதல் படம். இப்படத்தை பேரலல் யுனிவர்ஸ் பிக்சர்ஸ் மற்றும் ஜீ ஸ்டூடியோஸ் நிறுவனங்கள் இணைந்து தயாரித்து உள்ளன.

இந்த படத்தில் சேத்தன், அழகம் பெருமாள், இளங்கோ குமரவேல் என பலர் நடித்திருக்கிறார்கள். இந்த படமானது இந்தியாவின் முதல் கடல் பேய் படமாகும். எனவே படத்தின் மீதான எதிர்பார்ப்பு மிகப்பெரிய அளவில் இருந்து வருகிறது. இப்படம் நாளை வெளியாக உள்ளது.

இந்நிலையில் 'கிங்ஸ்டன்' திரைப்படத்தின் 2ம் பாக பணிகளை இந்த ஆண்டு அக்டோபர் மாதத்திற்குள் தொடங்கி விடுவோம் என்று ஜி.வி.பிரகாஷ் கூறியுள்ளார்.

## ஆர்லியன்ஸ் மாஸ்டர்ஸ் பேட்மிண்டன்: இந்திய வீரர் ஆயுஷ் ஷெட்டி காலிறுதிக்கு தகுதி



பிரான்ஸ் நாட்டில் ஆர்லியன்ஸ் மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டிகள் நடந்து வருகின்றன. கடந்த செவ்வாய் கிழமை தொடங்கிய இந்த போட்டிகள் வருகிற 9ந்தேதி வரை நடைபெறும்.

இதில், இந்திய வீரர் ஆயுஷ் ஷெட்டி காலிறுதிக்கு முந்தின சுற்றில் ஹாங்காங்கை சேர்ந்த ஜேசன் குனாவனை 21-17, 21-17 என்ற செட் கணக்கில் வீழ்த்தி வெற்றி பெற்றார். இதனால், காலிறுதிக்கு அவர் தகுதி பெற்றார். இதற்கு முன் நடந்தபோட்டியில், இந்தியவீரர்ஆயுஷ்ஷெட்டி, சிங்கப்பூரை சேர்ந்த லோ கியான் யூவை 21-17, 21-9 என்ற செட் கணக்கில் வீழ்த்தி வெற்றி பெற்றார்.

இதேபோன்று மற்றொரு புறம் பிரனாய் மற்றும் ஸ்ரீகாந்த் இருவரும் அவர்களுடைய போட்டிகளில் தோற்று வெளியேறினர். இதனால், இந்தியாவுக்கு பதக்கம் கிடைக்கும் வாய்ப்பு குறைந்து போயுள்ளது.

## விஜய்தான் என்னுடைய க்ரஷ் நடிகை கயாடு லோஹர்



அசாம் மாநிலம் தேஜ்பூரை சேர்ந்தவர் கயாடு லோஹர். இவர் கடந்த 2021ம் ஆண்டு மனோரஞ்சன் நடிப்பில் வெளியான 'முகில்பேட்டை' என்ற கன்னட படத்தின் மூலம் நடிகையாக அறிமுகமானார். தொடர்ந்து, 2022ம் ஆண்டு வெளியான ஸ்ரீவிஷ்ணு நடித்த 'அல்லூரி' மூலம் தெலுங்கில் அறிமுகமானார். இதன்பின்னர் ஒரு மராத்தி மற்றும் மலையாளப் படத்தில் நடித்திருக்கிறார். கடந்த பிப்ரவரி 21ம் தேதி பிரதீப் ரங்கநாதன் நடிப்பிலும் அஸ்வத் மாரிமுத்துவின் இயக்கத்திலும் வெளியான திரைப்படம் தான் 'டிராகன்'. டிராகன் படத்தின் மூலம் தமிழில் அறிமுகமான இவர் சமூக வலைதளங்களில் அதிகம் தேடும் நடிகையாக மாறிவிட்டார்.

தற்போது கயாடு, 'இதயம் முரளி' படத்தில் அதர்வாவுக்கு ஜோடியாக நடித்து வருகிறார். அடுத்ததாக அவர் தெலுங்கு பட இயக்குனர் கே.வி.அனுதீப்பின் 'பங்கி' படத்தில் நடிக்க உள்ளார். அவருக்கு மேலும் பட வாய்ப்புகள் குறைந்த வண்ணம் உள்ளது.

இந்த நிலையில், தமிழ் சினிமாவில் தனக்கு பிடித்த செலிபிரிட்டி க்ரஷ் குறித்து வெளிப்படுத்தியுள்ளார் நடிகை கயாடு. சேலம் தனியார் கல்லூரி ஆண்டு விழாவில் சிறப்பு விருந்தினராக நடிகை கயாடு லோஹர் பங்கேற்றார். இந்த நிகழ்வில் பேசிய நடிகை கயாடு லோஹர், தனக்கு பிடித்த செலிபிரிட்டி க்ரஷ் விஜய்தான் என்று கூறியுள்ளார். மேலும் விஜய் நடித்த 'தெறி' தனக்கு மிகவும் பிடித்த படம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பெண்களுக்கு உங்களுடைய அறிவுரை என ஒரு மாணவி கேட்க, அதற்கு பதிலளித்த அவர், "எல்லாரும் நம்மை நாமே முதலில் நம்ப வேண்டும். நான் என்னை நம்பியதால் தான் இங்கு நிற்கிறேன். நல்ல எண்ணத்தோடு முன்னேறுங்கள். அது உங்களை உயர்ந்த இடத்திற்கு கொண்டு செல்லும்" என்றார்.

## ஐ.எஸ்.எல். கால்பந்து: ஐதராபாத் அணியை வீழ்த்தி பஞ்சாப் எப்.சி. வெற்றி



3 அணிகள் இடையிலான 11வது இந்தியன் சூப்பர் லீக் (ஐ.எஸ்.எல்.) கால்பந்து தொடர் இறுதிக்கட்டத்தை நெருங்கியுள்ளது. இந்த தொடரில் ஐதராபாத்தில் இன்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில் ஐதராபாத் எப்.சி. பஞ்சாப் எப்.சி. அணிகள் மோதின.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில், பஞ்சாப் எப்.சி. அணி சார்பில் அலெக்ஸ் சாஜி ஆட்டத்தின் 41வது நிமிடத்திலும், லூகா 56வது நிமிடத்திலும், ஷாமி 86வது நிமிடத்திலும் தலா ஒரு கோல் அடித்தனர். ஐதராபாத் எப்.சி. அணி சார்பில் ராம்லுஞ்சுங்கா ஆட்டத்தின் 90+4 வது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார்.

இந்த நிலையில் ஆட்டநேர முடிவில் பஞ்சாப் எப்.சி. அணி 31 என்ற கோல் கணக்கில் ஐதராபாத் எப்.சி. அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது.

## துருவ் விக்ரமின் "பைசன்" பர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியீடு




கடந்த 2018ம் ஆண்டு வெளியான 'பரியேறும் பெருமாள்' திரைப்படம் மூலம் தமிழ் சினிமாவில் இயக்குனராக அறிமுகமானவர் மாரி செல்வராஜ். இந்த திரைப்படம் மிகுந்த பாராட்டை பெற்றது. இதையடுத்து, தனுஷ் நடித்த 'கர்ணன்', உதயநிதி ஸ்டாலின் நடித்த 'மாமன்னன்', மற்றும் 'வாழை' உள்ளிட்ட படங்களை மாரி செல்வராஜ் இயக்கினார்.

இதைத் தொடர்ந்து 'ஆதித்யா வர்மா' படத்தின் மூலம் சினிமாவில் அறிமுகமான நடிகர் துருவ் விக்ரம் கதாநாயகனாக நடிக்கும் புதிய படத்தை மாரி செல்வராஜ் இயக்கி வருகிறார். இந்த படத்திற்கு 'பைசன் காளமாடன்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த படத்தில் அனுபமா பரமேஸ்வரன், ரெஜிஷா விஜயன், பசுபதி, கலையரசன் உள்ளிட்ட பலர் நடிக்கின்றனர். பா.ரஞ்சித்தின் நீலம் ஸ்டுடியோஸ் மற்றும் அப்ளாஸ் என்டர்டெயின்மெண்ட் நிறுவனம் இணைந்து இந்த படத்தை தயாரிக்கின்றன. சமீபத்தில் இந்த படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்தது.

இந்நிலையில் இந்த படத்தின் புதிய அப்டேட் வெளியாகி உள்ளது. அதன்படி 'பைசன் காளமாடன்' படத்தின் பர்ஸ்ட்லுக் போஸ்டர் நாளை மாலை 5 மணிக்கு வெளியாகும் என்று படக்குழு அறிவித்துள்ளது.

## ஐபிஎல்: ஐதராபாத் அணியில் தென் ஆப்பிரிக்க வீரர் சேர்ப்பு



சென்னை, இந்தியாவில் நடைபெறும் உள்ளூர் டி20 தொடரான ஐ.பி.எல்.ன் 18வது சீசன் இந்த வருடம் நடைபெற உள்ளது. 10 அணிகள் பங்கேற்கும் இந்த தொடருக்கான அட்டவணை கடந்த சில தினங்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்டது.

அதன்படி இந்த தொடர் அடுத்த மாதம் 22ம் தேதி தொடங்குகிறது. கொல்கத்தாவில் நடைபெறும் முதல் லீக் ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி, பெங்களூரு ராயல் சேலஞ்சர்சை எதிர்கொள்கிறது.

இந்த நிலையில், சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணியில் தென் ஆப்பிரிக்கா வீரர் வியான் முல்டர் சேர்க்கப்பட்டுள்ளார். ஐ.பி.எல். ஏலத்தில் ஐதராபாத் அணி இங்கிலாந்தை சேர்ந்த ஆல்ரவுண்டர் பிரைடன் கார்சை ஏலம் எடுத்திருந்தது. இவர் ஐ.சி.சி. சாம்பியன்ஸ் டிராபி தொடருக்கான இங்கிலாந்து அணியில் இடம் பிடித்திருந்தார். ஆஸ்திரேலியாவுக்கு எதிராக விளையாடும்போது அவருக்கு காயம் ஏற்பட்டது. இதனால் அவருக்கு பதிலாக தென் ஆப்பிரிக்காவின் வியான் முல்டரை சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணி 75 லட்சம் ரூபாய்க்கு மாற்று வீரராக எடுத்துள்ளது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.